# தேவனை மறந்து போன சந்ததி

கிறிஸ்துவின் உபதேசத்திலே கட்டப்பட்ட ஒரு தேசத்திலே, பாடசாலை களிலே இருந்து கிறிஸ்தவத்தை கற்பிப்பித்து கொடுப்பதை அந்த தேசததின் அதிகாரிகள் நிறுத்திவிட்டார்கள். பெற்றோர்களில் பலரும், அது அநாவசியமான பாடம், அந்த நேரத்திலே, வேறு அநேக காரி யங்களை கற்றுக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டார்கள். சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு பின் னர்,தேவபக்தியற்ற சந்ததி பெருக ஆரம்பித்தது. தேவனைக் குறித்த பயம் இளம் சந்ததியினருடைய இருதயத்தில் இல்லாதிருந்தது மட் டுமல்ல, இரட்சிப்பை உண்டாக்கும் நாமமாகிய இயேசு கிறிஸ்து வின் நாம்த்தை உச்சரிப்பது அவர்களுக்கு விசனமாயும், இடறலாயும் இருந்தது. பெரும்பான்மையானனோர், தங்கள் தங்கள் மனதிற்கு சரி யாக தோன்றியதை செய்ய ஆரம்பித்தார்கள். கர்த்தருடைய வேதத்தை மறந்து போனதினாலே, தேசம் தன் குடிகளின் மூலமாய் தீட்டுப்பட்டது. பலருடைய வாழ்க்கை யானது பொருளாதார செழிப்பும், உல்லாசமான வாழ்க்கையும் என்ற அடிப்படையிலே கட்டப்பட்டது. திருமணம் என்ற பதமானது, அதன் தூய்மையை இழந்து போயிற்று. திருமணமில்லாமல் குடும்பங்கள் கட்டப்படலாம். விரும்பிய நபரை விரும்பி நபர், விரும்பிய போது திருமணம் செய்து கொள்ளலாம். நாட்கள் சென்றபின்பு, அவர் கள் ஏதோ காரணத்திற்காக, விம்பியபடி, விரும்பிய நேரத்தில், விவாக ரத்து செய்து கொள்ளலாம். இதனால், அநேக பிள்ளைகள், தாய், தந் தையின் அரவணைப்பில்லாமல், சிறிய பருவத்திலிருந்தே, பலவிதமாக சவால்களுக்கும், பிரச்சனைகளுக்கும், துஷ்பிரயோகங்களு க்கும் உள் ளாக்கப்பட்டார்கள். அதன் விளைவாக சிலர் மனநோய்க் குள்ளா னார்கள், வேறு சிலர் பலவிதமான துர்மார்க்கமான வழிகளிலே செல்ல ஆரம்பித்தார்கள். இன்னும் சிலர், வீடு வாசல் இல்லாமல், பெற்றோரின் பாசம் என்றால் என்ன என்பதை உணராமல், வாழ்ந்து, தங்களை தாங்களே பல வழிகளிலே கெடுத்துக் கொண்டார்கள். சில தசாப்தங்கள் கடந்து சென்றபின்பு, ஏன் இத்தனை பிரச்சனைகள், இவை எங்கே ஆரம்பித்தது? இதன் அடிப்படைக் காரணம் என்ன? என்பதை ஆராய் ந்து உணர்ந்து கொள்ளாமல், வாழ்க்கை முறையை வேதத்தி ன்படி சரிசெய்வதற்கு, பதிலாக, பின்விளைவுகளை சமாளித்துக் கொள்வத ற்காக தேவனுக்கு விரோதமாக சட்டங்களை ஏற்படுத்திக் கொண்டா ர்கள். பிரியமான வர்களே, தேவ பயமற்ற சந்ததியின் முடிவு பரிதாப மாக இருக்கும். எனவே நீங்கள் தேவனுக்கு பயந்து அவர் காட்டிய வழி யிலே நடந்து, பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியை போதியுங்கள்.

**ஏசாயா 24:5**

தேசம் தன் குடிகளின் மூல மாய் தீட்டுப்பட்டது;

**ஜெபம்**: நித்திய வாழ்விற்காக என்னை அழைத்த தேவனே, நான் உம்முடைய வழிகளை விட்டு ஒருபோதும் விலகிப் போய்விடாதபடிக்கு, உணர்வுள்ள இருயத்தை எனக்கு தந்து என்னை உம் வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேத வாக்கியங்களின் நோக்கம்

> **மத்தேயு 22:29**
> நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்.

ஆதியிலே ஆதாம், ஏவாள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட சுயாதீனத்தை துஷ்பிரயோம் செய்து, தேவனுடைய கட்டளையை மீறி, பிசாசானவனுடைய சத்தத்திற்கு இடம் கொடுத்ததால், அதன் பின்விளைவாக தேவசயாலை இழந்து, நித்திய மரணத்திற்குள்ளார்கள். அதனால், நாம் பாவம், மரணம், கீழ்படியாமை என்ற பதங்களை வேதத்திலே முதன் முறையாக காண்கின்றோம் அவர்களுடைய மூத்த குமாரனாகிய காயீன், தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுக்க்க மனதில்லாமல் போன போது, அவன் தன் இளைய சகோதரனாகிய ஆபேலை கொலை செய்தான். அதனால், எரிச்சல், கொலை என்ற பதங்களை வேதத்திலே முதன்முறையாக காண்கின்றோம். இப்படியாக, எந்த மனிதனும் தேவனுடைய சத்ததிற்கு கீழ்படியாமல் போகும் போது, அந்த இடத்திலே பாவமும், அதனால் உண்டாகும் பின்விளைவுகளும், புதிய தீமையான பதங்க ளையும் அறிந்து கொள்கின்றோம். உண்டாகின்றது. ஆதியிலே, தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். ஸ்திரியானவள், புருஷனிலிருந்து எடுக்கப்பட்டாள். இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான் அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஆனால், ஒரு புருஷன் தன் மனைவியிருக்க வேறொரு ஸ்திரியை இச்சி த்தான். அதனால், விபசாரம் என்ற பாவமும், அதனால் உண்டாகும் பின்விளைவுகளும் மனிதனால் உருவாக்கப்பட்டது. அதனால், விவாகரத்து என்று பதத்தை வேதத்திலே காண்கின்றோம். கருப்பொருளாவது, விவாகரத்து என்பது தேவனால் உண்டாகவில்லை. மனிதனானவன், தேவனுடைய கட்டளையை தள்ளிவிட்டதால், அவன் மனதிலே உண்டான இச்சையினால் உண்டானது. இப்போது, விவாகரத்து என்று ஒரு பதம் வேதத்திலே இருப்பதனால், தேவ ஜனங்கள், தங்கள் மனைவியை எப்படி வேத பிரமணாத்தின்படி தள்ளிவிட்டு, தங்களை நீதிமான்களாக காண்பிக்கலாம் என்றஎண்ணங் கொள்கின்றார்கள். தங்கள் இச்சையை நிறைவேற்றி முடித்ததும், நான் தேவ வார்த்தையின்படி அதை செய்தேன் என்று திருப்தியடைகின்றார்கள். பிரியமானவர்களே, தேவ வார்த்தைகள், நாம் நம்முடைய இச்சைகளை நிறைவேற்றக் கொடுக்கப்படாமல், நித்திய ஜீவனுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கின்றது.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, உம்முடைய ஜீவ வார்த்தைகளை என் துர்குணத்திற்கு மூடலாக பயன்படுத்தாமல், உம்முடைய சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்ற பய்படுத்த கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதங்களை ஆராய்ந்தறிகின்றவர்

**எரேமியா 17:10**

**இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.**

ஒரு ஊரிலே, ஜனங்கள் மத்தியிலே நன்மதிப்பை பெற்ற ஒரு ஐசுவரியவானிருந்தான். திருமணமாகி அநேக வருடங்களுக்கு பின், தன்னுடைய மனைவியை விவாகரத்து செய்து கொள்ள தீர்மானித்தான். தான் ஒரு சன்மார்க்கன் எனவே, அதை முறைப்படி செய்ய வேண்டும் என்று, தேசத்தின் சட்டதிட்டங்களுக்கமைய ஒழுங்கு முறைகள் யாவற்றையும் பின்பற்றி, தன்னோடு இருபந்தைந்து வருடங்கள் நெறிமுறையோடு வாழ்ந்த மனைவிக்கு, தன் சொத்துகளின் ஒரு பகுதியை கொடுத்து, அவளை விவாகரத்து செய்து கொணடான். அதைக் கண்ட ஊராரில் பலர் அவன் தாராள உள்ளம் கொண்ட யோக்கியமுள்ள மனுஷன் என்று கூறிக் கொண்டார்கள். தேசத்தின் சட்டம் அவனுடைய செயலை அங்கீகரித்தது. ஊரார் அவனுடைய நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டார்கள். அவனுடைய உறவினர் நண்பர்கள் அவனுடைய தாராள குணத்தை மெச்சினார்கள். ஆனால், அவனுடைய செயலானது தேவனுடைய சமுத்திலே ஏற்றுக் கொள்ளப்படுமோ? இல்லை. நல் ஒழுக்கத்தோடு வாழ்ந்து வரும் அவன் மனைவி உயிரோடிருக்க, ஒரு இளவயதுள்ள பெண்ணின்மேல் இச்சை கொண்டதால், அந்தப் பெண்ணை தனதாக்கி கொள்ள வேண்டும் என்று வயது சென்ற தன் மனைவியை தள்ளிவிட்டான். விவாகரத்தின் ஒழுங்கு முறை மோசே வழியாக கொடுக்கப்பட்டது. அக்காலத்திலே அதை தள்ளுதல் சீட்டு என்று கூறினார்கள். இந்த பதமானது, அன்றிருந்த, புருஷர்களில் சிலருக்கு மிகவும் ஏற்புடையதாக இருந்தது. அதாவது, மிக இலகுவாக தங்கள் மனைவியை சட்டபப்படி தள்ளிவிட்டு, தேவ கட்டளையின்படியே விவாகரத்ரை செய்தேன் என்று கூறிக் கொண்டார்கள். இவர்கள் தங்கள் இச்சையை நிறைவேற்ற, தேவனுடைய கட்டளைகளை வியத்தமாக்குகின்றவர்களாக வாழ்ந்து வந்தார்கள். "ஒருவன் பதிவிருந்து கொல்லாமல், தேவச்செயலாய்த் தன் கைக்கு நேரிட்டவனைக் கொன்றால், அவன் ஓடிப்போய்ச் சேரவேண்டிய ஸ்தலத்தை உனக்கு நியமிப்பேன்." என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருப்பதால், தங்கள் எரிச்சலை திருப்தியாக்க எதிரியை கொன்று, தேவச்செயலாய் அதை செய்தேன் என்று கூறி விடுகின்றார்கள். பிரியமானவர்களே, தேவனுடைய கற்பனைகளையும், அதன் நோக்கத்தையும் அறிந்து கொள்ளுங்கள். தேவன் மனிதர்களின் இருதங்களை ஆராய்ந்தறிக்கின்றவர். எனவே அவருக்கு முன்பாக உத்தமமாய் நடந்து கொள்ளுங்கள்.

**ஜெபம்**: இருதயத்தை ஆராய்ந்து என்னுடைய சிந்தையை அறிகின்ற தேவனே, நான் என் உள்ளத்திலே அக்கிரம சிந்தை கொள்ளாதபடிக்கு, உமக்கு முன்பாக உத்தமனாக வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனிடத்திலே மன்னிப்பு உண்டு

**1 யோவான் 1:7**

**அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.**

சில ஆண்டுகளுக்கு முன்னதாக, தேவனுடைய சமுத்ததிலே, விவாக வாக்குமூலத்தை அறிக்கையிட்டு, திருமணம் செய்து கொண்ட விசுவா மார்கத்தை சேர்ந்த ஒரு இளம் தம்பதிகள், மிகவும் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்து வந்தார்கள். வாழ்க்கையிலே ஏற்பட்ட சில சவால்களையும், போராட்டங்களையும் தீர்த்து வைப்பதைக் குறிதத கருத்து முரண்பாடுகள் அவர்களுக்குள் அதிகரித்து வந்ததால், இருவரும் நீதிமன்றத்திற்கு சென்று, சட்டப்படி தன் மனைவியை விவாகரத்து செய்து கொண்டான். தேசத்தின் விவாக பதிவேற்புப் புத்தகத்திலே, அவன் மனைவி, இப்பொழுது அவனுடைய மனைவியல்ல. அவன் விரும்பிய இன்னுமொரு ஸ்திரியையும், அவள் விரும்பிய இன்னுமொரு மனுஷனையும் மறுமணம் செய்து கொள்ள தேசத்தின் சட்டப்படி அவர்கள் தகுதி பெற்றவர்களாக இருந்தார்கள். ஆனால், தேவனாகிய கர்த்தர் முன்னிலையிலே, அவர்கள் செய்து கொண்ட வாக்குறுதியானது இன்னும் தள்ளுபடியாகவில்லை. நாட்டின் சட்டம், தேவனுடைய வார்த்தையை மாற்றிவிட முடியாது. அவர்கள் தேவனுடைய பார்வையிலே இன்னும் கணவனும் மனைவியுமாக இருப்பதால். அவர்கள் வேறொருவரை திருமணம் செய்யும் போது, தேவனுடைய பார்வையிலே விபசாரம் செய்கின்றவர்களாக இருக்கின்றார்கள். தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்கு கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான். அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று ஆண்டவராகிய இயேசு தாமே, விவாகத்தைக் குறித்த தேவ கட்டளையின் முழுமையான நோக்கத்தை விளக்கிக் கூறியிருக்கின்றார். (மத்தேயு 19:3-9) சிலர் இந்த வார்த்தைகளை நன்றாக அறிந்தும், வேறு சிலர் இதன் தார்பரியத்தை உண்மையாக அறியாலும் பாவம் செய்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள், தொடர்ந்தும் பாவத்திலே வாழாதபடிக்கு, பாவங்களை மனதார அறிக்கையிட்டால், பாவங்களை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி சுத்திகரிப்பதற்கு தேவன்தாமே உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். உமது கிருபையின்படி எனக்கு இரங்கும். உம்முடைய நிலைபரமான ஆவி அடியேனை தாங்கச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மன்னிக்க முடியாத குற்றம் எது?

திருமணமாகியிருந்த இளம் தம்பதிகளின் முகங்களிலே சந்தோஷத்தை காணாத அவர்களுடைய மேய்பரானவர், ஒரு நாள் அவர்களை சந்தித்து பேசினார். அந்த வேளையிலே கணவனானவன், மேய்ப்பரை நோக்கி: இவள் எனக்கு துரோகம் செய்தாள் அதனால் நான் இவளை தள்ளி விடப் போகின்றேன் என்றான். காரியம் என்னவென்று மேய்ப்பரானவர் அவனுடைய மனைவியிடத்தில் கேட்டார்: பழைய சக ஊழியரொவரோடு, தகுதியற்ற முறையிலே தொலைபேசியூடாக சில வார்த்தைகளை பேசிவிட்டேன் என்று கண்ணீரோடு அறிக்கையிட்டாள். அதைக் குறித்து மனம்வருந்திய அந்த இளம் மனைவியானவள், தன் குற்றத்தை மறைக்காமல் அதை அறிக்கையிட்டு, இனி இப்படியான காரியங்கள் எதுவுமே நடைபெறாது என்றும், தன்னை மன்னித்துவிடும் படியாகவும் தன் கணவ னிடம் வருந்திக் கேட்டாள். அவனோ, வேதம் கூறுகின்றபடி,இவள் தன் உள்ளத்திலே பாவம் செய்தாள் என்று, அவன் தன் மனதை கடினப்படுத்திக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்ட மேய்ப்பரானவர், அவனை தனியே அழைத்து: மகனே, நீ வேத வார்த்தையின்படி உன் மனைவியானவள் தன் மனதிலே மோக பாவம் செய்தால் என்றும், அதனால் அவளை நீ விவாகரத்து செய்ய வேண்டும் என்று திட்டமாக கூறுகின்றாய். அவள் செய்த குற்றத்தை அவளே ஏற்றுக் கொண்டாள். அவளை தள்ளிவிட உனக்கு சுயாதீனம் உண்டு. அதற்கு முன்னதாக, நான் கேட்கும் கேள்விக்கு, நீயே உன் இருதயத்தில் பதிலை கூறிக்கொள் என்று கூறி, “நீ திருமணம் ஆகிய நாளிலிருந்து, வேத வார்த்தையின்படி உன் உள்ளத்திலே சுத்தமாக இருந்து வந்தாயா? ஊடகங்கள் வழியாக வரும் தகுதியற்ற வீடியோ பதிவுகளை பார்த்து நீ உன் மனதிலே இச்சித்து கொள்ளவில்லையா? சிலருடைய மீறுதல்கள் வெளியரங்கமாக இருக்கின்றது, வேறு சிலரின் பாவங்களோ இன்னும் அந்தரங்க மாயிருக்கின்றது. ஆனால் தேவனுக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை என்று தேவனுடைய நீடிய பொறுமையை குறித்து, புத்தியை தெளிவிக்கும் ஆலோசனை கூறினார். பிரியமானவர்களே, நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் தேவனுடைய சுத்த கிருபையாயிருக்கின்றது. மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் கிறிஸ்தவ வாழ்க்கையின் அடித்தளமான அம்சங்கள். எனவே, எந்த அளவினாலே நாம் மற்றவர்களை அளக்கின்றோம் என்பதைக் குறித்து நாம் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**மத்தேயு 7:2**

**நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.**

**ஜெபம்**: என் இருதயத்தை அறிந்த தேவனே, கோணலும் மாறுபாடுமான இந்த உலகத்திலே, உம்முடைய வார்த்தைகளின் விளக்கத்தை உணர்ந்து, உம்முடைய திருச்சித்தத்தை என் வாழ்விலே நிறைவேற்ற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கற்பனைகளின் கருப்பொருள்

மனிதனோ, மற்றவர்களுடைய வெளியரங்கமாகஇருக்கும் கிரியைகளை பார்த்து, அவர்களை நியாயந்தீர்கின்றான் ஆனால், தன்னுடைய இருத யத்திலே மறைந்திருக்கும் பாதகமான இச்சகைகளை தேவன் ஆராய்ந் தறிகின்றார் என்பதை உணராதிருக்கின்றான். “எப்படியெனில், இருதய த்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விப சாரங்களும், வேசித்தனங்களும், கள வுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷ ணங்களும் புறப்பட்டுவரும்.” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கி ன்றார். மனிதர்களின் உள்ளத்திலிரு க்கும் இச்சைகளுக்கு தக்கதாக தேவன் நீதியை சரிக்கட்டுகின்றவராக இருந்தால், யார் இந்த உலகத்திலே தப்பித்துக் கொள்ள முடியும்? ஒரு சமயம், விபசாரத்திலே கண்டுபிடிக்க ப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் ஆண்டவர் இயே சுவினிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி: போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல் லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக்கொ ண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, அவர் மறு படியும் குனிந்து, தரையிலே எழுதினார். அவர்கள் அதைக் கேட்டு, தங் கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர் முதல் சிறி யோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். ஆம் பிரியமா னவர்களே, தேவனுடைய கற்பனைகளைக் குறித்து தப்பான எண்ணங் கொள்ளாதபடிக்கு, தேவனை அறிகின்ற அறிவிலே வளர்ந்து பெருகு ங்கள். கற்பனைகளின் கருப்பொருளை அறிந்து கொள்ளுங்கள். “அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்மு டைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கி றார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பய ப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரி தாயி ருக்கிறது.” வேத வார்த்தைகளின்படி மற்றவர்களுடைய ஒவ்வொரு குற் றங்களும் தண்டிக்கபட வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு, உங்கள் மேல் வெளிப்பட்ட தேவ இரக்கத்தை மற்றவர்களுக்கு காண்பியுங்கள்.

**புலம்பல் 3:22**

**நாம் நிர்மூலமாகாதிருக் கிறது கர்த்தருடைய கிரு பையே, அவருடைய இர க்கங்களுக்கு முடிவில் லை.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, என்னுடைய இருதய மானது உமக்கு முன்பாக உண்மையுள்ளதாக இருக்கும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவன் மாறாதவராயிருக்கின்றார்

தேவனுடைய ஊழியராகிய மோசே தேவனை நோக்கி: உம்முடைய நாமம் என்ன என்று உம்முடைய ஜனங்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்வேன் என்று தேவனிடத்தில் கேட்ட போது, அதற்குத் தேவன்: "இருக்கிறவராக இருக்கிறேன்" என்று மோசேயுடனே சொன்னார். இனி வரவிருக்கும் காரியங்களை குறித்து, பரிசுத்த வேதாகமத்தின் கடைசிப் புத்தகத்திலே, தம்மை தேவனுடைய ஊழியராகிய யோவானுக்கு வெளிப்படுத்திய போது, "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்" என்று திருவுளம்பற்றினார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கின்றார் (எபிரெயர் 13:8). கொலை செய்யாதிருப்பாயாக என்று மோசே வழியாக கட்டளையை கொடுப்பதற்கு முன்னதாகவே, முதல் குடும்பத்திலே, தன் இளைய சகோதரனாகிய ஆபேலை அவன் கொலை செய்ய முன், காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார். அதாவது, மனதிலே தோன்றும் மாம்சத்தின் இச்சைகளாகிய எரிச்சல், வன்மம், பகைமை, கசப்பு போன்றவைகள் இருதயத்திலே தங்க இடம் கொடுக்க வேண்டாம் என்பதையே அவர் ஆதியிலிருந்து நமக்கு கற்றுக் கொடுக்கின்றார். ஒருவன் ஒதான் ளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கின்றவனாக இருந்தால், அவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். மெய்யான ஒளியாகிய தேவனை இன்னும் அறிய வேண்டிய பிரகாரமாக அறியாதிருக்கின்றான். மனதிலே மறைவாக இருக்கும் இவைகளே சகோதரருக்கு விரோதமான பாவத்தின் வெளியரங்கமான கிரியைகளை உண்டு பண்ணும். எனவே, அது பழைய ஏற்பாடு, இது புதிய ஏற்பாடு என்று தேவனாகிய கர்த்தரின் வார்த்தைகளைக் குறித்து தப்பான எண்ணம் கொள்ளாதபடிக்கு, தேவனாகிய கர்த்தரை அறியும் அறியவிலே வளருங்கள். தேவ ஆவியானவருடைய துணையோடு, அவர் ஆதியிலிருந்து விளம்பிய வேதத்தை, அவரு டைய ஜீவ வார்த்தைகளை தொகுத்து, வகையறுத்து கற் றுக் கொள்ளுங்கள்.

**1 யோவான் 2:11**

**தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்;**

**ஜெபம்:** பிதாவாகிய என் தேவனே, நான்இருளிலே இருந்து இருளிலே நடக்கின்றவனாக இருக்காதபடிக்கும்,பகைமையைகுறித்துமேன்மை பாராட்டாதபடிக்கும், உம்முடைய வழியிலே நடக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உள்ளத்தை உள்ளபடி சொல்லுங்கள்

ஒரு மாணவனானவன் பாடசாலையிலே சில குழப்பங்களுக்கு காரணமாக இருந்ததால், அவனுடைய பெற்றோர், அவனை கண்டித்து, சில அறிவுரைகளை கூறியிருந்தார்கள். சில நாட்களுக்கு பின்பு, அவன் செய்யாத குற்றத்திற்கு அவன்தான் காரணம் என்று சக மாணவர்கள் குற்றப்படுத்தியிருந்தார்கள். தான் முன்பு செய்த குறும்புச் செயல்களினால், தன் பெற்றோர் தன்னை நம்ப மாட்டார்கள் என்று அவன் கலக்கமடைந்திருந்தான். அதனால், அவன் தான் கூறுவது உண்மை என்பதை உறுத்திப்படுத்துக் கொள்வதற்காக, தான் அதிகமாக நேசித்து வந்த தன் பாட்டியில் பெயரிலே சத்தியம் செய்து கொண்டான். அந்த மாணவன் மாத்திமல்ல, வயதுக்கு வந்தவர்களும் முதியோர்களும், தாங்கள் கூறுவது உண்மை என்று மற்றவர்களுக்கு நிரூபிக்கும் பொருட்டு, வேறு மனிதர்களின் பெயரிலோ அல்லது புனித ஸ்தலங்களில் பெயரிலோ சத்தியம் செய்து கொள்வார்கள். ஏன் ஒருவன் அப்படி செய்ய வேண்டும்? ஒருவேளை அவன் கூறும் காரியமானது உண்மையாதாகவோ அல்லது முழுமையான உண்மையாகவோ இல்லாதிருக்கலாம். ஆனால், அவனுக்கு தன் வாய்மையை குறித்து தனக்கே நம்பிக்கையற்ற நிலைமை உண்டாவதாலும், இக்கட்டான சந்தர்ப்பங்களுக்கு தப்பித்துக் கொள்வதற்காகவும் இப்படியாக சத்தியம் செய்து கொள்கின்றார்கள். இவை யாவும் அவசியற்றவைகள் என்று சத்திய வேதமானது ஆதியிலிருந்து கூறுகின்றது. அதாவது நீங்கள் உண்மையை கூறும் போது அதை ஒருவன் அதை நம்ப மாட்டேன் என்று அந்த உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தால், அது யாருடைய தவறு? நீங்கள் உண்மையோடு வேறு ஒரு பெரியவருடைய பெயரை சேர்த்துக் கொள்வதால் தேவன் முன்னிலையில் அது இன்னும் அதிக உண்மையாகி விடுவதில்லை. அதுபோலவே, நீங்கள் கூறும் பொய்யோடு ஒரு புனித ஸ்தலத் தின் பெயரை சேர்த்துக் கொள்வதால் அந்தப் பொய்யானது தேவன் முன்னிலையிலே உண்மையாகிவிடுவதில்லை. மனிதர்களுக்கு பயப்படுகின்றவர்கள் இவ்வண்ணமாக ஆணையிடுகின்றார்கள். ஆகையால், உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 5:37**

**உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.**

**ஜெபம்**: சத்தியமுள்ள தேவனே, மருகூட்டும் வார்த்தைகளால் நான் பேசுவது உண்மை என்று நிரூபிக்க எத்தனிக்காமல், உள்ளதை உள்ள தென்று உண்மையை தெளிவாக பேச என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பொய்யாணையிட வேண்டாம்

தேவனாகிய கர்த்தர் என்றும் மாறாதவர் என்பதை கடந்த நாட்களிலே தியானம் செய்தோம். அதாவது, தேவனாகிய கர்த்தர் தாமே பழைய ஏற்பாட்டிலே வேறு விதமாக சிந்தித்தார், புதிய ஏற்பாட்டிலே வேறு விதமாக செயல்படுகின்றார் என்று சிலர் தங்கள் அறியாமையினாலே தப்பான எண்ணங் கொண்டிருக்கின்றார்கள். குறித்த காலத்திலே, மோசே வழியாக நியாயப்பிரமாணத்தை கொடுத்த போது, கர்த்தர் தாமே, பொருத்தனைளையும், ஆணைகளையும் குறித்து கூறும் போது, "ஒருவன் யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக் குட்படுத்திக் கொண்டாலும் அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியயெல்லாம் செய்யக் கடவன்" என்று கூறினார். (எண்ணாகமம் 30:2) என்ற பிரமாணமானது, தம்முமைடைய ஜனங்கள் உண்மையை உள்ளபடி பேசுவதின் அவசியத்தையும், பேசியதை நிறைவேற்றி முடிப்பதும் எவ்வளவு முக்கியமுதானதென்பதையும் வெளிப்படுத்தும்படி, தேவனாகிய கர்த்தர் தம்மடைய நாமத்தில் செலுத்தும்படியாக கூறினார். பொருத்தனைகளும் ஆணைகளும் தேவனாகிய கர்த்தர் பேரில் இடப்படுவதால், அதை தவறாமல், முற்றும் முழுவதுமாக நிறைவேற்றி முடிக்க வேண்டியதாக இருந்தது. பயபக்தியுள்ளவர்கள் இதன் தார்பரியத்தை உணர்ந்து, தேவ பயத்தோடு, தங்கள் வாய்மொழியை நிறைவேற்றினார்கள். ஏனையோர்கள் மதத்தலைவர்களால் நிர்பந்திக்கப்படுவார்கள். காலப்போக்கிலே, மற்ற சட்டதிட்டங்களைப் போல, இந்த ஒழுங்குமுறையும் அதன் சாரத்தை இழந்து, நீதிமன்றங்களிலும், மூப்பர் சங்கங்களிலும், தேவ சபையிலும், வழக்குக்கும், வாதுக்கும், பொய் களை உண்மையைப்போல காண்பிப்பதற்கும், தேவனுடைய நாமத்தின் பேரில் சத்தியம் செய்யும், ஆணையிடவும் ஆரம்பித்தார்கள். அது மட்டுமல்லால், ஒருவனோடு இன்னுமொருவன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு, வானம், பூமி, பலிபீடம், தாய் தந்தையர்களின் பெயர்களையும் சேர்த்துக் கொண்டார்கள். மனிதர்கள் உண்மையை பேசுவதற்கும், அதை நம்புவதற்கும் இவ்வளவு சிரமமா? நம்முடைய தேவன் இருதங்களை ஆராய்ந்து, மனிதர்களுடைய சிந்தையை அறிகின்றராயிருக்கின்றார். எனவே இருதயத்திலே உண்மையுள்ளவர்களாயிருங்கள்.

**லேவியராகமம் 19:12**

**என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்.**

**ஜெபம்:** இருதங்களை ஆராய்தறிகின்ற தேவனே, உமக்கு முன்பாக நான் எப்போதும் உண்மையுள்ளனாக காணப்படும்படி, என் இருதயத்தில் வஞ்சமான சிந்தனைகள் தோன்றாதபடி காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பொய் சொல்லாதிருங்கள்

உன் தேவனாகிய கர்த்தரின் நாமத்தை வீணில் வழங்காதிருப்பாயாக என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கின்றார். எனவே, சர்வ வல்லமை யுள்ள தேவன் பெயரை கூறி, ஒப்பந்தங்களை ஏற்படுத்திவிட்டு, தங்க ளுடைய பங்கை நிறைவேற்க தவறுவது, தங்கள் வாழ்விற்கு ஆபத் தானது என்று எண்ணிக் கொண்டவர்கள், தங்கள் உண்மையற்ற இருத யத்தினால், தங்கள் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை தவர்த்துக் கொள்ளும்படிக்கு, தங்கள் ஒப்பந்தங்களை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக, வானத்தையும், பூமி யையும், தாயையும், தந்தையையும், புனித ஸ்தலங்களையும் சேர்த்துக் கொள்வது அவர்கள் அறிவிற்கு ஏற்புடையதாக இருந்தது. அதாவது, தேவனுடைய நாமத்தை கூறாமல்,வேறெந்த நாமத்தையும் கூறி பொய் களை பிணைத்துக் கொண்டாலும், அது பெரிதான பிரச்சனையில்லை என்று எண்ணிக் கொண்டார்கள். அதனால், மனிதர்கள் பற்பல நாம ங்களை கூறி, சத்தியம் செய்து கொள்ள ஆரம்பித்தார்கள். இன்று சிலர், தங்கள் பெலவீனங்களை அறிந்திருந்தும், தேவனுடைய நீடிய பொறுமையை அசட்டை செய்து, பரிசுத்த ஆவியானவர் பெயரில் துணி கரமாக சத்தியம் செய்து கொள்வதை காண்கின்றோம். "நான் உங்க ளுக்கு சொல்லுகிறேன் பரிச்சேதம் சத்தியம் பண்ண வேண்டாம். வான த்தின் பேரில் சத்தியம்பண்ண வேண்டாம், அது தேவனுடைய சிங்கா சனம், பூமியின் பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய பாதபடி, எருசலேமின் பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம் அது மகா ராஜாவின் நகரம். உன் சிரசின் பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம், அதின் மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே" என்று ஆண்டவராகிய இயேசு காரியத்தின் கருப்பொருளை விளக்கிக் கூறியிருக்கின்றார். அதாவது, உங்கள் "ஆம்" ஆம் என்றும், "இல்லை" இல்லை என்றும் இருப்பதாக. நீங்கள் உண்மையைக் கூறும் போது, மற்றவர்கள் உங்களை நம்ப மறுத்தால், அது உங்களுக்கு குற்றமாக இருக்காது. அப்படியாக நீங்கள் உண்மை, மனதார பேசும் போது, நாளடைவிலே மற்றவர்கள் இவன் கூறினால் உண்மையா கத்தான் இருக்கும் என்று உங்களைக் குறித்து சாட்சியிடுவார்கள் அல்லவா? பிரியமானவர்களே சகோதர சகோதரிகளே, வேத வாக்கி யங்களின் கருப்பொருளை உணர்ந்து கொண்டு, அதன்படி கிரியை களை நடப்பியுங்கள். தூய ஆவியானவர்தாமே உங்களுக்கு துணை செய்வார். *(நீதி 12:17, எபே 4:15, யோவான் 8:45, 16:13)*

**கொலோசெயர் 3:9**

ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்;

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, என்னுய சுய எண்ணங்களை நிறை வேற்ற உம்முடைய வார்த்தைகளை அற்பமாக எண்ணி கண்ணிகளிலே சிக்கிவிடாதபடிக்கு என்னை காத்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – லூக்கா 6:43–45

# நம்முடைய வாயின் வார்த்தைகள்

வேத வார்த்தைகளைக் குறித்த கருப்பொருளை அறியாத சிலர், “தேவனுடைய பேரிலாவது, வானத்தின் பேரிலாது, பூமியின் பேரிலாவது, தகாத யோக்கியமற்ற வார்த்தைகளை அல்லது தூஷணமான வார்த்தைகளினாலே ஆணையிட்டுக் கொள்வதே தவறு” என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். பரிசுத்த வாழ்க்கை வாழ வேறு பிரிக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, நீங்கள் தேவன் தங்குகின்ற ஆலமாக இருக்கின்றீர்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கின்றார். எனவே தகாத யோக்கியமற்ற வார்த்தைகளும், நெறிகெட்ட தூஷணமான வார்த்தைகளும் எந்தக் காலத்திலும், எந்தப் பருவத்திலும், எந்த சூழ்நிலையிலும் மனிதர்களுக்கு தகாதவைகள். அத்தகைய பேச்சுக்கள் பரிசுத்தவான்களின் வாழ்க்கையிலே சிந்தனையிலும் வரக்கூடாதவைகள். ஒருவன் தன் நாவினாலே, பிதாவாகிய தேவனைத் துதித்துக் கொண்டு, தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிப்பவனாக இருப்பதெ ப்படி? துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுவதெப்படி? உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமைபாராட்டாதிருங்கள், சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் கொல்லாமலும் இருங்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டடோ, அங்கே கலகமும், சகல துர்ச்செய்கை களுமுண்டு (யாக்கோபு 3:16). எனவே, வைராக்கிமும், விரோதமும் ஒரு விசுவாசியின்இருதயத்தில் இருந்தால், அங்கே கலகங்களுக்கும்ம், வாக்குவாதங்களுக்கும், தகாத வார்த்தைகளுக்கும் இடமுண்டாகும். “நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகின்றான்: பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகின்றான். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.” எனவே, நம்முடைய வாயிலிருந்து எப்போதும், தேவன் விரும்பும் உண்மையை வெளிப்படும்படிக்கு, நம்முடைய இருதயமானது தேவனுடைய வார்த்தைகளின் தியானத்தினாலே நிறைந்திருக்க வேண்டும். மனிதனுடைய பெலமானது குறைவுள்ளது. மனிதனால்கூடாததை செய்து முடிப்பதற்கு சத்திய ஆவியானவர்தாமே, தகுந்த வேளையில், நமக்கு தேவையான பெலன் தந்து நடத்திச் செல்ல ஆயத்தமுள்ளவராகவே இருக்கின்றார். *(1 கொரிந்தியர் 3:16-17, யாக்கோபு 3:9-14, லூக்கா 6:43-45)*

**எபேசியர் 5:4**

**அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள், ஸ்தோத்திரஞ் செய்தலே தகும்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, என் இருதயமானது எப்போதும் உம்முடைய வார்த்தையாகிய நல்ல பொக்கிஷத்தினால் நிறைந்திருக்கும் படிக்கு, உம்முடைய வார்த்தையை வாஞ்சிக்கும் உணர்வுள்ள இருத யத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழிவிலிருந்து மீட்கும்படிக்கு...

அநியாயங்களுக்கு எதிராக எழுந்து நிற்க யாருமில்லையா? அநீதியை தட்டிக் கேட்க ஒரு தைரியசாலியுமில்லையா? என்று கால தாமதமின்றி உடனடியாக நீதி செய்யப்பட வேண்டும் என்பது பொதுவாக மனிதர்களின் சுபாவமாக இருந்து வருகின்றது. எனக்கு அநீதி செய்தவனை எப்படி தண்டிப்பது? எனக்கு நேரிட்டது போலவே அவனுக்கு இன்னும் அதிகமாக துன்பமும், நஷ்டமும் விளைவிப்பதே மனிதர்களுடைய நீதியாக இருக்கின்றது. என்னுடைய மாட்டின் காலை அடித்து உடைத்த அயலவனுக்கு ஒரு நல்ல பாடம் படிப்பிக்கும்படி, அவனுடைய மாட்டின் இரண்டு கால்களை அடித்து உடைத்து விட வேண்டும் என்று எண்ணிக் கொள்கினறார்கள். இந்த வேதனைகளின் ஆரம்பம் எங்கே? நம்முடைய முதல் பெற்றோராகிய ஆதாம் ஏவாள், தேவனாகிய கர்த்தருடைய கட்டளையை மீறி, கொல்லவும் அழிக்கவும் வரும் பிசாசானவனின் சத்தத்திற்கு செவி கொடுத்ததால், பழிக்கு பழி வாங்கும் சுபாவம் மனிதர்களிடம் உண்டாயிற்று. மன்னிப்பு என்ற எண்ணத்திற்கு இடமில்லாமல், ஒருவனுக்கு விரோதமாக மற்றவன் எழுந்து, ஒருவரையொருவன் கொன்று அழித்துப் போடும்படிக்கும், அந்த வன்மத்தையும், பகையையும் சந்ததி சந்ததியாக உண்டுபண்ணிவிடுவதும், பிசாசானவனுடைய திட்டடமாக இருந்தது. ஆதியிலிருந்து பழிக்கு பழிவாங்குது மனிதர்களுடைய வாழ்விலே, ஓயாத ஒரு நச்சு வட்டமாகவேஇருந்து வருகின்றது. ஏதோம் என்று அழைக்கப்பட்ட ஏசாவினுடைய சந்ததி, யாக்கோப்பின் சந்ததியின் அழிவை காண்பதையே நோக்கமாக கொண்டிருந்தது. அறிந்தோ அறியாமலே செய்யப்பட்ட குற்றங்களுக்கு முடிவு எங்கே? மனித குலத்தை அழிந்த்துப்போடும் இந்த சதித்திட்டத்தை யாரால் மாற்ற முடியும்? சத்துருவானவன் கொல்லவும் அழிக்கவும் வருகின்றான். நானோ ஜீவனை கொடுக்கும்படி வந்தேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அந்த வாக்குத்ததமானது நிறைவேறும்வரைக்கும், வன்முறைகளையும், பழிவாங்கும் மாம்ச இச்சையை உலகத்திலே, விசேஷமான தம்முடைய ஜனங்கள் மத்தியிலே மட்டுப்படுத்தும்படிக்கு, மோசே என்னும் தம்முடைய ஊழியர் வழியாக சமூகவியல் நீதித்துறை சார்ந்த சட்ட திட்டங்களை தம்முடைய ஜனங்களுக்கு கொடுத்தார். அதன் கருப்பொருளை இந்நாட்களிலே தியானம் செய்வோமாக.

**யோவான் 10:10**

திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.

**ஜெபம்**: நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனே, கொல்வதும் அழிப்பதும் என்ற எண்ணம் என்னில் உருவாகாதபடிக்கு, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்தில் வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# தீமையை விலக்குவாயாக

ஒரு கிராமத்திலே இருந்த வீடொன்றிலே, எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியானது, தவறுதலாக, மேசையில் விழுந்து விட்டதை கண்ட தாயா னவள், துரிதமான ஓடிச் சென்று, மேசையின் அருகே விளையாடிக் கொண்டிருந்த இருந்து தன் சின்ன மகனானவனை தூக்கி அணைத்துக் கொண்டாள். அவனுடைய தகப்பனானவனோ, நெருப்பானது வீட்டை பட்சித்து, தன் குடும்பத்தை ஆபத்திலிருந்து காத்துக் கொள்ளும்படிக்கு வேகமான சென்று மேசையில் பற்றிக் கொண்ட நெருப்பை அணைத்து விட்டார். நம்முடைய தேவனாகிய கர்த்தரும், ஒரு நல்ல தாயைப் போலவும், காக்கும் தந்தையைப் போலவும், தீமையை தம் ஜனத்தின் மத்தியிலிருந்து முற்றாக விலக்கி விடுவதும், தம்முடைய ஜனங்கள் தீமையை பற்றிக் கொள்ளாதபடிக்கு அவர்களை தீமையை விட்டு விலக்கி விடுவதையுமே எப்போதும் நோக்கமாக கொண்டுள்ளார். ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், ஒலே சாட்சியினால் நியாந்தீர்க்கக்கூடாது. இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்பட வேண்டும். ஒருவன்மேல் ஒரு குற்றத்தைச் சுமத்தும்படி, ஒரு பொய்சாட்சிக்காரன் அவன்மேல் சாட்சிசொல்ல எழும்பினால், வழக்காடுகிற இருவரும் கர்த்தருடைய சந்நித்தியில் அக்காலத்தில் இருக்கும் ஆசாரியர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் முன்பாக வந்து நிற்பார்களாக. அப்பொழுது நியாயாதிபதிகள் நன்றாய் விசாரணைசெய்யக்கடவார்கள்: சாட்சி கள்ளச்சாட்சி என்றும், தன் சகோதரன்மேல் அபாண்டமாய்க் குற்றஞ்சாற்றினான் என்றும் கண்டால், அவன் தன் சகோதரனுக்குச் செய்ய நினைத்தபடியே அவனுக்கு செய்யக்கடவீர்கள். இவ்விதமாய்க் தீமையை உன் நடுவிலிருந்து விலக்குவாயாக. மற்றவர்களும் அதைக் கேட்டுப் பயந்து, இனி உங்களுக்குள்ளே அப்படிப்பட்ட தீமையை செய்யாதிருப்பார்கள் (உபாகமம் 19:16-20). கருப்பொருளாவது, எப்படியாக புற்றுநோய்க் கிரிமியானது, தீவிரமாக ஒருவனுடைய சரீரத்தில் பரவி, அவனை கொன்று போடுகின்றதோ, அதைப்போல தீமையானது பரவி எல்லா ஜனங்களை முற்றிலும் கெடுத்துப்போடாதபடிக்கு, தேவன் காத்துக் கொள்கின்றார். நாமோ, தீமைக்கு பிதாவாகிய பிசாசானவனோடு இணைந்து, தீமையை பரப்பும் நோய்க்கிருமியைப் போல மாறிவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

**உபாகமம் 19:19**

**இவ்விதமாய்த் தீமையை உன் நடுவிலிருந்து விலக்குவாயாக.**

**ஜெபம்:** நன்மைகளின் ஊற்றாகிய தேவனே, நான் தீமைக்கு தீமை செய்து, தீமையின் வித்தை விளையச் செய்கின்றவனாக மாறாதபடிக்கு, ஆபத்து நாட்களிலே உம்மைப் பற்றிக் கொண்டிக்கும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "கண்ணுக்குக் கண்"

மனிதர்களுடைய வாழ்விலே, தங்களுக்கோ, தங்கள் குடும்பத்திற்கோ, தாங்கள் நேசிக்கின்றவர்களுக்னோ தீமைகள் இழைக்கப்படும் போது, மாம்சத்தின் உணர்ச்சிகள் தூண்டப்படுகின்றது. தங்களுக்கு தீமையை இழைத்தவர்கள் துரிதமாகவும், அதிகமாகவும் தங்கள் கண் முன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதையே பொதுவாக விரும்பிக் கொள்வார்கள். அப்படியாக காலத்திற்கு முன்பதாக செயற்பட்டர்கள், தாங்கள் நினைத்த தண்டனையை மற்றவர்களுக்கு செய்து, காலங்கள் கடந்த பின்னர்,நான் ஏன் அவசரத்தில் அப்படியான செய்தேன் என்று மனம் வருந்திக் கொள்வார்கள். சிலரோ, தங்களுக்கு உண்டான சேதம் அற்பமானதாக இருக்கும் போது, சேதத்தை உண்டு பண்ணினவனின் பொருட்களின்மேல் கண் வைத்து, இலட்சக்கணக்கான பணத்தை நஷ்ட ஈடாக பெற்றுக் கொள்ளும்படிக்கு நீதிமன்றங்களிலே வழக்கை தொடுக்கின்றார்கள். சிலர், நியாயமில்லாமல், ஒருவன் செய்த சிறிய குற்றத்திற்காக அவனை அநேக ஆண்டுகள் சிறையிலே அடைத்து வைக்க முயற்ச்சி செய்கின்றார்கள். எனவே, கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற சட்ட பிரமாணமானது பிறப்பிக்கப்பட்டது. அதாவது, ஒருவன் மற்றொருவன் செய்த குற்றத்தை மன்னிக் மனதில்லாமல், அவனை தண்டிக்க விரும்பினால். முதலாவதாக, அவன் நீதி செய்வதை தன் கரங்களிலே எடுத்துக் கொள்ள கூடாது. மாறாக நியாயம் விசாரிக்கின்றவர்களிடத்திலே கொண்டு செல்ல வேண்டும். நியாயம் விசாரிக்கப்படும் போது, ஒவ்வொரு சேதத்திற்கும் ஒரு பெறுமதி உண்டு. அதற்கு அதிகமாக ஒருவனும் தண்டிக்கப்படக் கூடாது. எடுத்துக் காட்டாக, ஒருவன் இன்னுமொருவனுடைய சைக்கிளின் சில்லை சேதப்படுத்தியிருந்தால், சில்லின் பெறுமதியே அவன் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடாக இருக்க வேண்டும். அதற்கு மேலாக அவனை தண்டிக்கக்கூடாது என்பதே அதன் கருப்பொருளாக இருந்தது. ஆனால், இன்று மனிதர்கள், தங்களுக்கு தீமை ஏற்பட வேண்டும் என்று பதிவியிருக்கின்றார்கள். தெருவிலே செல்லும் போது, ஒருவனுக்கு தவறுதலாக, சிறிய ஆபத்து நேரிடும் போது, தங்கள் நோவை பன்மடங்காக காண்பித்து, எப்படியாவது, இலட்சக்கணக்கான பணத்தை நஷ்ட ஈடாக பெற்றுக் கொள்ள, ஊரிலுள்ள சிறந்த சட்ட நிபுணர்களை தேடு அலைகின்றார்கள். பிரியமானவர்களே, நீதியுள்ள நியாயாதிப தியாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் உங்கள் இருதயம் நியாயமுள்ளதாக காணப்படுவதாக

**மத்தேயு 5:38**

**கண்ணுக்குக் கண்**, **பல்லுக்கு பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்**.

**ஜெபம்**: நீதியுள்ள நியாயாதிபதியாகிய தேவனே, அநியாயமான பொருட்களை நான் அபகரித்துக் கொள்ளாமலும், அநீதியான ஆதயங்களை விரும்பாமலும், நீதியின் வழயிலே நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நஷ்ட ஈடா அல்லது விண் கைமாறா?

ஒரு விசுவாசியானவன், இன்னுமொரு விசுவாசியினால் அல்லது வேறொரு மனிதனின் தீமையான செயலினாலே நஷ்டப்பட்டால், அடைந்த நஷ்டத்தை ஈடு செய்து கொள்ள நீதி நியாயங்களை நடப்பிக்க ஏற்படுத்தப்பட்டவர்களை நாடுவதற்கும், நஷ்ட ஈட்டை சட்டப்படி பெற்றுக் கொள்ளுவதற்கும் அவனுக்கு உரிமை உண்டு. ஒருவேளை அந்த நஷ்ட ஈடானது இழந்து போனதை மீள பெற்றுக் கொள்ள உதவி செய்யலாம். ஆனால், பற்பல சமயங்களிலே, முன்பிருந்த நிலைமைக்கு திரும்புவது சாத்தியமற்றதாக இருக்கும். எனினும் நஷ்ட ஈட்டை பெற்றுக் கொள்பவர்கள் தங்கள் மனதிலே தற்காலிகமான ஆறுதலை பெற்றுக் கொள்ளலாம். இதைவிட மேலான காரியத்தை நம்மை உருவாக்கினவர், நம்மை முன்குறித்தவர், நம்மை அழைத்தவர், நம்மை தெரிந்து கொண்டவர், நமக்கு நித்திய ஜீவனுக்கு வழியை காண்பிப்பவர், நமக்கு அழியாத விண் கைமாறை அளிக்கின்றவராகிய ஆண்வராகிய இயேசு கூறுகின்றார். திருடனாகிய பிசாசாவனே தீமைக்கு பிதாவாக இருக்கின்றான். எனவே ஒருவன் உனக்கு  தீமை செய்யும் போது, நீ தீமையினாலே மறுவுத்தரவு கொடுக்க உனக்கு அதிகாரம் உண்டு. ஆனால், நீ அப்படி செய்யும் போது, நீ திரும்பச் செய்யும் தீமைக்கு பிதா யார்? நீ தீமைக்கு தீமையை செய்ய நாடும் போது யாருடைய திட்டத்திற்குள் நீ இருக்கின்றாய்? நீ தீமைக்கு தீமையை வெற்றிகரமாக செய்து முடித்தபின்பு, உன் எதிராளி நீ செய்த தீமைக்கு இன்னும் அதிக தீமை செய்யாதிருப்பானோ? அந்த தீமையின் நச்சுவட்டம் எங்கே முடிவடையும்? ஆதலால், தேவனின் வலதுபாரிசத்திலிருக்கும் மேலானவைகள் தேடும் படியாக பரிசுத்த வேதாகமம் நமக்கு அறிவுரை கூறுகின்றது. தீமையை தீமையினாலே வெல்லும்படி முயற்சி செய்து, ஈற்றிலே தோல்வியை உனதாக்கி கொள்ளாமல், உனக்கு இழைக்கப்படும் தீமையை, பிதாவாகிய தேவனிடத்திலிருந்து வரும் நன்மையினால் மேற்கொள்ள பழகிக் கொள். மனித பெலத்திற்கு இது மிகவும் கடினமானது, ஆதலால், பிதாவாகிய தேவன்தாமே, கிறிஸ்து இயேசுலிலுருந்த தேவ ஆவியை நமக்கு துணையாக கொடுத்திருக்கின்றார். அவர் வழியாக நாம் தீமைக்கு பதிலாக நன்மை செய்யும் பெலத்தை நாம் பெற்றிருக்கின்றோம். எனவே, உபத்திரவங்கள் மத்தியிலே நம்மை தேற்றி, நல் வழிப்படுத்தும், தேவ ஆவியானவருக்கு இடம் கொடுப்போமாக.

**1 பேதுரு 3:17**

**தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.**

**ஜெபம்:** மேலானவைகளை எனக்காக வைத்திருக்கும் தேவனே, மாம்சத்தின் இச்சைகளை உண்டு பண்ணும் அவயவங்களை களைந்து போட்டு, ஆவிக்குரிய போராயுதங்களை தரித்துக் கொள்ளும்படி எனக்கு உதவி செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆவியின் போராட்டம் வெற்றி தரும்

**எபேசியர் 6:11**

**தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்.**

கோணலும் மாறுபாடுமான உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் விசுவாசிகளே! "நாம் தேவனால் உண்டாயிருக்கின்றோமென்றும், உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கின்தென்றும் அறிந்திருக்கின் றோம். *(1 யோவான் 5:19)*. அதனால், நாம் செல்லும் இடமெங்கும் தீமை சூழ்திருக்கின்றது. அதைக் கண்டு நாம் பயந்து மருளுகின்றவர்கள் அல்லர். ஆனால், நம்மை நோக்கி வரும் தீமைகளுக்கு நாம் எப்படி பதிலளிக்கப் போகின்றோம் என்பதைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதற்கான வழிமுறைகளை பரிசுத்த வேதாகமம் நமக்கு கற்றுக் கொடுகின்றது. நாம் இந்த உலகத்திலே மாம்சத்திலே நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கின்றவர்கல்ல. *(2 கொரி 10:3)*. அதாவது, இந்த உலகத்தார் யாவரைப் போலவும் நமக்கு ஒரு சரீரம் உண்டு. அந்த சரீரத்திலே நாம் கொஞ்சக் காலம் வாழ்கின்றோம். நாம் உயிர் வாழும்வரை இந்த உலகத்திலே செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு. ஆனாலும் அவைகளை நம்முடைய மாம்ச சிந்தையின்படி அல்லது இந்த உலகத்தின் ஆலோசனையின்படி செய்கின்றவர்கள் அல்லர். அயலிலே வாழும் ஒருவன் உங்களை சண்டைக்கு இழுத்தால், அது வாய்ச் சண்டையாக இருந்தாலும், கைகலப்பாக இருந்தாலும், அந்த தீமையானது மாம்ச இச்சைக்குரியது. எனவே, நாம் மாம்சத்தின்படி தீமைக்கு எதிர்த்து நிற்க முடியாது. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்திற்கேற்றவைகளா யிராமல், அரண்களை நிர்மூலமாகுகிறதற்குனு தேவ பலமுள்ளவைக ளாயிருக் கிறது. ஆவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மனமேட்டிமை யையும் நிர்மூ லமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்படியச் சிறை ப்படுத்துகின்றவர்களாயிருக்கின்றோம். *(2 கொரி 10:4-5)*. எனவே, நாம் தீமைக்கு, இந்த உலகத்தின் போக்கின்படி எதிர்த்து நிற்காமல், தேவ ஆவியின் படி எதிர்த்து நிற்கின்றோம். ஆவியின் போராட்டதை போராடுவதற்கு, பரிசுத்த வேதாகமம் கூறும் சர்வாயுதவர்கர்தை தரித் தவர்களாக, காணப்படவேண்டும். இவ்வண்ணமாகவே நாம், நன் மையி னாலே தீமையை மேற்கொள்ளும்படிக்கு, நாம் தேவனுடைய கரத்தின் கிரியைகளாக காணப்படுகின்றோம். எனவே, தீமைக்கு தீமை யின்படி எதிர்த்து நிற்காமல், தேவ வார்த்தையின்படி அவைகளை மேற்கெண்டு முன்னேறிச் செல்வோமாக.

**ஜெபம்**: தீமை என்னை மேற்கொள்ளாதபடிக்கு என்னை காத்து வழிநடத்தும் தேவனே, உம்முடைய ஆவியினாலே, என்னை எதிர்த்து வரும் தீமைகளை மேற்கொள்ள என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தீமையை மேற்கொள்ளும் வழி

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த துஷ்ட மனிதனொருவன், தேவனுக்கு பயந்து அவர் வழியிலே நடக்கும் விசுவாசியொருவன்மேல் எசிரச்சல டைந்தான். அதனால், அவன்மேல் குற்றம் சுமரப்பண்ணும்படிக்கு, அவன் தன் வீட்டில் நடக்கும் களியாட்ட கொண்டாட்டங்களுக்கு வருந்தி அழைத்தான். அந்த விசுவாசியானவனோ, அவை தன்னுடைய வாழ்க்கைமுறைக்கு ஏற்புடையவைகள் அல்ல என்று சாந்தமுள்ள ஆவியோடு பதிலளித்தான். மேற்கொண்டு, எதையும் செய்ய முடியாமல், அந்த துஷ்டம், அந்த விசுவாசியின் குடும்பத்தினரை பரியாசம் செய்து வந்தான். எப்படியாவது இந்த விசுவாசியானவன் தன்னோடு ஒரு சண்டையை ஆரம்பிக்கும்படிக்கு அவன் சதி செய்து வந்தான். விசுவாசியாவன், துஷ்டனின் எண்ணப்படி, சண்டை முதலிலே ஆரம்பித்து பின்னர், தன்னுடைய வஞ்சகமான கண்ணிக்குள் அவனை மாட்டிவிடும்படி திட்டம் போட்டிருந்தான். அந்த விசுவாசியானவனோ, அதை நன்கு உணர்ந்தவனாக, தன்னுடைய உணர்வுகளுக்கு இடங் கொடுத்து, வஞ்கமான கண்ணிக்குள் அகப்படாதபடிக்கு, தேவனுடைய வார்த்தையானது தன்னிலே நிறைவேறும்படிக்கு இடங் கொடுத்தான். பரிசுத்த வேதாகமகம் கூறுவதின்படி, தேவனுடைய வார்த்தைக்கு அவன் கீழ்படியும்போது, அவன் தேவ சித்தை தன் வாழ்விலே நிறைவேற்று கின்றவனாக இருக்கின்றான். அப்படி அவன் தேவ சித்ததை தன் வாழ்விலே நிறைவேற்றும்போது, பிசாசானவனின் திட்டத்திற்கு எதிர்த்து நிற்கின்றான். பிசாசானவன் நினைத்தபடி, அவன் பிசாசானவனுக்கு எதிர்த்து நிற்காமல், தேவனுடைய வார்த்தையின்படி, பிசாசானவனுக்கு எதிர்த்து நிற்கின்றான். அதனால், அவன் தீமையை தீமையினால் எதிர்த்து நிற்காமல், பொல்லாங்கனின் தீமையை, பரத்திலிருந்து இறங்கி வரும் நன்மையினால் எதிர்த்து நிற்கின்றான். அவன் அப்படியாக தேவ வார்த்தையின்படி வாழும் போது, எதிராளியானவன், வெட்கமடைந்து, தோல்வியடைந்து, அவனைவிட்டு ஓடிப் போகின்றான். ஒருவேளை தீமை செய்கின்றவன், உங்கள் மாம்சத்திலே தோன்றும் மனித யுக்திகளை எதிர்த்து உங்களை மேற்கொண்டு விடலாம். ஆனால், தேவனுடைய வார்த்தையை எதிர்த்து அதை ஒருபோதும் தேற்கொள்ள முடியாது. எனவே தேவனுக்கு கீழ்படிந்திருங்கள், பிசாசானவனிற்கு எதிர்த்து நில்லுங்கள் அப்போது அவன் உங்களைவிட்டு ஓடிப் போய்விடுவான்.

**யாக்கோபு 4:7**

ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, பிசாசானவனின் தந்திரமான கண்ணிக்குள் நான் அகப்படாதபடிக்கு, உம்முடைய நீதியின் வழியிலே நான் வாழும்படிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் சாயலிலே வளருங்கள்

தீமையான ஆலோசனைகள் துன்மார்கருடைய உள்ளத்திலே தங்கியிருக்கும். பாவங்கள், பரியாசங்களும், களியாட்டுக்களும், பாவிகளுடைய வழியிலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்திலும் இருக்கும். எனவே, ஒரு விசுவாசியாவன் தன் சொந்த தீர்மானத்தின்படி, துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருந்தால், அவன் தன்னை அநேக தீமைகளுக்கும், பாவ சோதனைகளுக்கும் விலக்கிக் காத்துக் கொள்வான். ஆனால், சில வேளைகளிலே தவிர்க்க முடியாத சூழ்நிலைகளிலே, துன்மார்கர்களையும், பாவிகளையும், பரியாசக்காரர்களைம் சந்திக்கும் சந்தர்பங்கள் விசுவாசிகளின் வாழ்விலே உண்டாகிவிடுகின்றது. அந்த சூழ்நி லைகளை நாம் வேத வார்த்தையின்படி ஞானமாய் நடந்து, ஜெயங் கொள்ளும்படிக்கு, கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்க வேண்டும். (சங்கீதம் *1:1-2*) சில சந்தர்ப்பங்களிலே விசுவாசிகள், மற்றவர்கள் செய்த நன்மையை மறந்து, விசுவாசிகள் மற்றவர்களுக்கு தீமை செய்து விடுகின்றார்கள். "நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது." (நீதி *17:13*) எனவே, ஒருவேளை நீங்கள் நன்மைக்கு தீமை செய்திருந்தால், சீக்கிரமாய் ஒப்புரவாகிக் கொள்ளுங்கள். ஒருவன் நீங்கள் செய்த நன்மைக்கு தீமை செய்திருந்தால், அவனும் உங்களோடு ஒப்புரவாக்கிக் கொள்வது அவனுக்கு நன்மையை உண்டாக்கும். இவ்வண்ணமாக ஒருவன் உங்களுக்கு தீமை செய்யும் போது, கோபத்திலே மனம் பதறி, உடனடியாக தீமை செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஒருவன் உங்களை வலக்கன்னதில் அறையும், நீங்கள் மறுபடியும் அவனுடைய வலக் கன்னத்திலே அறைந்தால், அந்த சண்டையானது ஓய்ந்து போவதில்லை. ஒருவன் உங்களை நிந்திக்கும் போது, நீங்கள் அவனை மறுபடியும் நிந்தித்தால், அது ஒரு தொடர்கதையைப் போல இருக்கும். கிறிஸ்துவினிமித்தம் பாடுகளை சகித்தக் கொள்ள பழகிக் கொள்ளுங்கள். உங்களை அழைத்தவர் உங்களை அறிந்திருக்கின்றார் எனவே உங்களை துன்பப்படுத்துகின்றவர்களுக்கு, அவர்கள் கொடுப்பது போன்ற பதிலடி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள்.

**மத்தேயு 5:39**

**ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு.**

**ஜெபம்**: என் அறியாமையின் நாட்களை எனக்கு மன்னித்த தேவனே, என்னை நிந்திக்கின்றவர்களை நான் நிந்திக்காதபடிக்கு, உம்மைப்போல நான் நன்மை செய்யும்படிக்கு எனக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மண்ணுக்குரியவைககள்...

ஒரு கிராமத்திலே வாழ்ந்து வந்த விசுவாசியானவனின், அயலவன், அவர்களுடைய வீட்டிற்கு இடையிலே, அவரவர் நிலங்களை பிரிக்கும் வேலியை அடைக்கும் போது, அறிந்தோ அறியாமலோ, சில மரங்க ங்களை ஒரு விறகடையளவு விசுவாசியானவனின் வீட்டின் பக்கமாக நட்டு வேலியை அடைத்துக் கொண்டான். அதை அறிந்த விசுவாசியா னவன், இந்த அநியாயத்திற்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று, பொலிசாரிடம் சென்று முயையீடு செய்தான். பின்னர், சில நாட்கள் வேலைக்கு செல்லாமல், பட்டண த்திற்கு சென்று, தன் பணத்தை செலவழித்து, பிரபல்யமான சட்டத் தரணியை கொண்டு, நீதிமன்றத் திலே வழக்கை தாக்குதல் செய் தான். அந்த காரியத்தை செய்து முடிக்கும்வரைக்கும் அவன் ஒயாதிருந்தான். ஏன் அவன் அப்படி செய்தான்? இந்த பூமையை குறித்து ஆசை அவனை இன்னமும் பற்றிக் கொண்டிருந்தது. பூமிக்குரியவர்கள் அதற்குரிய பொக்கிஷக்களை சேர்த்து வைப்பதற்கு பிரயாசப்படுவார்கள். ஒரு விசுவாசியின் மேலான வாஞ்சையானது எதுவோ, அதை அதை அவன் எல்லாக் காவலோடும் காத்துக் கொள்வன். எதை இழந்து போனாலும், தங்கள் மேலான வாஞ்சையைஇழஅவைகளில் ஒன்றேனையும் அவர்கள் இழந்து போகாதபடிக்கு காத்துக் கொள்வதற்காக தங்களால் இயன்ற கிரியைகளை நடப்பிப்பார்கள். நாம் பரலோகத்திலே பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டும். “மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டிட மாட்டேன்” என்று அருமையான எழுதப்பட்டிருக்கும் பாடல்வரிகளைப்போல, எதை இழந்தாலும் பரலோகத்தை இழந்து போகாதபடிக்கு, பொல்லாங்காக தோன்றுகின்றவைகளையும் நாம் விட்டு விட ஆயத்தமுள்ளர்களாக இருக்க வேண்டும். ஒருவன் உங்கள் பொருளொன்றை அநியாயமாக எடுத்துவிட்டால், அதை மறுபடியும் மீள பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் வழக்காட உங்களுக்கு உரிமையும் அதி காரமும் உண்டு. உண்மையான நியாயம் கிடைக்கும் என்பதை ஒருவரும் பூரண நிச்சயத்தோடு கூற முடியாது. அத்தோடு, நீங்கள் வழக்காடும் போது, குற்றம் செய்து, தேவனுடைய பார்வையிலே அநியாயக்காரனாக காணப்படாதபடிக்கு, அழிந்து போகும் உலக காரியங்களை இழந்து போவதற்கு ஆயத்தமுள்ளவர்களாக இருங்கள். ஏனெனில் அவை யாவும் ஒருநாள் முற்றாக அழிந்து போகும். விண்ணுக்குரியவர்கள் விண்ணுக்குரியவைகளை காத்துக் கொள்கின்றார்கள்.

**மத்தேயு 5:40**

**உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக் கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு.**

**ஜெபம்**: பரலோக தேவனே, அழிந்து போகும் இந்த மண்ணுக்குரிய பொக்கிஷங்களை காத்துக் கொள்ளும்படிக்கு, என்னுடைய காலங்களை விரயப்படுத்தாதபடிக்கு, எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | ஏப்ரல் 20

📖 மாலை வாசகம் – வெளிப்படுத்தல் 1:6

# பிதாவின் சித்தம் நிறைவேறட்டும்

**ரோமர் 8:35**

**உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போலஎண்ணப்படுகிறோம்**

தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்து, ஆண்டவராகிய இயேசுவை சிலுவையில் அறையும்படி ஒப்புக் கொடுத்த போது, அவனுடைய போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரமனையிலே கொண்டுபோய், போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச்செய்து, அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக்கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள். அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டு போனார்கள். (மத்தேயு 27: 27-31). அவரோ, தீர்க்கதரிசிகள் தம்மைக் குறித்து முன்னுரைத்தபடி, “அவர் நெருக்கப் பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக் கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.” (ஏசாயா 53:7). ஏன் இத்தனை பாடுகள்? ஏன் இத் தனை அவமானதும் நிந்தையும்? “மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணி னோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது.” (ஏசாயா 53:4-5). பிதாவாகிய தேவனின் அநாதி தீர்மானத்தை நிறைவேற்றி முடிக்கும்படிக்கு, பாவமறியாத பரிசுத்தர், தம்மைத்தாமே பலியாக ஒப்புக் கொடுத்தார். இதுவே நம்மை மீட்க வந்த மெசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் சாயல். அந்த சாயலிலே நாம் வளரும்படிக்கும், இந்த பூமியிலே நாம் எதையும் இழந்துவிட ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். எந்தஒரு காரியத்திலும் என் இஷ்டபடி அல்லது உலக நீதியின்படி பதிலடி கொடுப்பேன் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, பிதாவாகிய தேவனின் சித்தம் உங்களில் நிறைவேற இடங் கொடுங்கள்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை வேறு பிரித்த தேவனே, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், எனக்காக பலியான என் மீட்பராகிய இயேசுவை மறந்து என் இஷ்டப்படி செயல்படாதிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேலான பொக்கிஷங்கள்

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்." என்று நல்மேய்பனாகிய இயேசு கூறியிருகின்றார். திருடன் ஒரு வீட்டிற்குள் கன்னமிட்டு நுழையும் போது, அந்த வீட்டிலிருக்கும் விலையுயர்ந்த பொக்கிஷங்களை திருடிக் கொள்வான். தேவனுடைய வீடாகிய உங்களுக்குள் இருக்கும் விலையுயர்ந்த பொக்கிஷங்கள் என்ன? நித்திய ஜீவனே, நம்முடைய அதிமேன்மையானதும், பிரதானமானதுமாக நம்முடைய வாஞ்சையுமாக இருக்க வேண்டும். இந்த உலகத்திலே வாழும்வரை நம்மிடத்தில் இருக்கும் தெய்வீக சுபாவங்கள் நம்முடைய பரிசுத்த வாழ்வை காத்துக் கொள்வதற்கும், பிதவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கும் இன்றியமையாதவைகள். எடுத்துக் காட்டாக, ஒருவன் நியாமின்றி உங்களை பகைத்து, உங்கள் நீடிய பொறுமையையும, சாந்த குணத்தையும் குலைத்து, உங்களை கோபப்படுத்தி, பகையை உங்களில் விதைத்து விட்டால், அவன் உங்கள் பொக்கிஷக்களை திருடிக் கொள்கின்றவனாக இருக்கின்றான். அதுமட்டுமல்லாமல், நீங்கள் அழிந்து போகும்படி பகைமையை உங்கள் உள்ளத்தில் பெருக்கப்பண்ணி விடுவான். எனவே, "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ." *(மத்தேயு 5:39-41)*. கருப்பொருளாவது, எதிரியின் இஷ்டம் உங்களில் நிறைவேற இடங் கொடுக்காதிருங்கள். அதாவது, நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாக்காமல், எதிரியின் தாக்குதல்களுக்கு இன்னும் அதிகமாக இடங் கொடுக்க வேண்டும் என்பது பொருளல்ல. மாறாக, உங்களிடம் ஒப்புக் கொடுக்கப்பட்ட, உன்னதமான மெய்பொருளை எதிரியாகிய பிசாசாவன், தன் வஞ்சகத்தினால் திருடிவிடாதபடிக்கு, நீங்கள் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றீர்கள். உலகத்திற்கு வெளிச்சமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோம். மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 5:41**

**ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ.**

**ஜெபம்:** ஞானமுள்ள இருயத்தை தந்து வழிநடத்தும் தேவனே, எதிரியாகிய பிசாசானவனின் தந்திரமான திட்டங்களுக்கு இடங்கொடுத்த, மேன்மையானவைகளை இழந்து போகாதபடிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# காரணங்களை தேடுபவர்கள்

**மத்தேயு 5:42**

**உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே.**

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த வாழ்ந்து வந்த ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் பல பொருளாதார நெருக்கடியினால், அவர்களுடைய வாழ்விலே, பல கஷ்டங்களை எதிர்நோக்கி செல்வதை கண்டு கொண்டான். அந்தக் குடும்பத்தின் தகப்பனானவன், வேலை செய்து உழைப்பவனாக இருந்த போதும், குடித்து வெறிப்பதிலும், தனக்கு கிடைத்த பணத்தை பெருக்க வேண்டும் என்று சூதாட்டங்களிலும் தன் உழைப்பின் பெரும்பகுதியை அநியாயமான முறையிலே செலவு செய்து வந்தான். அதனால் அவனுடைய பிள்ளைகள் சில நேரங்களிலே பட்டினியாகவும், பாடசாலைக்கு வேண்டிய பாடப்புத்தகங்களை குறித்த நேரத்தில் வாங்க முடியாமல் இருந்து வந்தார்கள். அவர்களுக்கு உதவியை செய்தால், அவர்களுடைய தகப்பனானவன், திருந்த மாட்டான். பிள்ளைகள் நன்றாக இருக்கின்றார்கள் என்று கண்டால், அவன் குற்ற உணர்வின்றி தொடர்ந்து அநியாயங்களை செய்து வருவான் என்று கூறி, அந்த ஊரிலுள்ள சிலர், அந்தக் குடும்பத்திற்கு உதவி செய்யாமல் தங்கள் இருதயத்தை கடினப்படுத்டதிக் கொண்டார்கள். அவர்கள் கூறியதில் உண்மை இருந்த போதும், அந்த மனிதனுடைய பிள்ளைகள் இளவயதிலே பல துன்பங்களை எதிர்நோக்கி வந்தார்கள். குடும்பத்தின் கஷ்டத்தினாலும், சமுதாயத்தின் கடின இருதயத்தினாலும், ஒரு வேளை அந்தப் பிள்ளைகள், பணம் சம்பாதிப்பதற்கு தவறாக வழிகளை தெரிந்து கொள்ளக்கூடிய சந்தர்பங்களும் அங்கே காண ப்பட்டது. அந்த ஊரிலுள்ள அவர்கள் வீட்டிற்கு அருகே வாழ்ந்து வந்த தாயானவள், தன் வீட்டிலே சமைத்த உணவு பொதிகளைகளையும், பிள்ளைகளுக்கு வேண்டிய அத்தியவசியமான பொருட்களையும் அவ்வப்போது வாங்கிக் கொடுத்து உதவி செய்து வந்தாள். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த உலகக்கத்திலே அநேக அநீதிகளும், அநியாயங்களும் நடந்து வருவது உண்மை. அதனால், நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யாமல் இருப்பதற்கு தகுந்த காரணங்களை தேடாமல், அதை நிரூபிப்பதற்காக அதிக நேரங்களை விரயப்படுத்தாமலும், தேவையிலுள்ளவர்களுக்கு இரங்கி உதவுவதற்கு, அந்த தாயானவள் போல நல்ல காரணங்களையும், ஏற்ற வழிமுறைகளையும் தேடுகின்றவர்களாக காணப்பட வேண்டும்.

**ஜெபம்**: என் குறைகளை அறிந்தும் எனக்கு இரங்கும் தேவனே, நான் மற்றவர்களுக்கு உதவி செய்யும்படிக்கு நல்ல காரணங்களை தேடும்பனாக இருக்க நீர் எனக்கு உமக்கொத்த இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யார் குணமடைய வேண்டும்?

ஒரு ஊரிலே இயங்கி சமூக நலத்திட்டத்தின்படி அந்த ஊரிலே வறுமைக் கோட்டிற்குள் வாழும் பலருக்கு மாதாந்த உதவித்திட்டமாக கூப்பன் அட்டை கொடுக்கப்பட்டு வந்தது. அந்த உதவித்திட்டமானது அந்த ஊரிலிருந்த ஆலமொன்றினால் ஏற்படுத்தப்பட்டு, அந்த ஆலயத்தின் மூப்பரொருவரினால் முன்னெடுகப்பட்டு வந்ததது. அந்த உதவித்திட்டத்தில், உதவி பெறும் குறிப்பிட்ட மனிதனொருவனுகடைய குடும்பமானது அந்த உதவித்திட்டதி னால் நன்மை பெற்று வந்தார்கள். ஆனால் அந்த மனிதனுக்கோ புகை ப்பிடிக்கும் பழக்கம் இருந்தது. நாளா ந்தம், இரண்டு தடவைகள் அவன் அப்படியாக புகைப்பிடித்துக் கொள் வான். என்பதை அறிந்து கொண்ட அந்த மூப்பரானவர், அவனுக்குரிய உதவித்திட்டத்தை உடடினயாக நிறு த்திவிடும் படியாக தீர்மானம் செய்து கொண்டார். பிள்ளைகள் பட்டினியிருக்கும் போது, அவன் உணர்வடையவான் என்று எண்ணிக் கொண்டார். அன்றிரவு அவர் படுக்கையிலே சாய்ந்திருக்கும் போது, திடீரென, தன்னுடைய கடந்து காலத்தை குறித்து ஞாபகம் அவர் உள்ளத்திலே அவரை உறுத்தியது. பல ஆண்டுகளாக, ஒரு மறைவான, தவறான பழக்கம் அவரை வாட்டிக் கொண்டிருந்தது. அதனால், மறைமுகமாக அவருடைய குடும்பத்திற்கும் இன்றும் சிலருக்கு சில பாதிப்புகள் ஏற்பட்டிருந்தது. அந்த ஆண்டுக ளிலேலும், தேவனாகிய கர்த்தர்தாமே அவருடைய பிரயாசங்களை ஆசீர்வதித்து வந்தார். தேவனிடமிருந்து தனக்கு கிடைத்த அந்த இரக்க த்தோடு பார்க்கும் போது, ஊரிலுள்ள அந்த மனிதனானவன் செய்யும் காரியம் அற்பமானது என்று உணர்ந்து கொண்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் ஒவ்வொருவரும் எந்த அளவினாலே மற்றவர்களை அளக்கின்றோம் என்பதைக் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். குற்றங் குறைகளை பாராமுகமாக விட்டுவிட வேண்டும் என்பது பொருளல்ல, ஏற்ற வேளையிலே, தகுந்த வார்த்தைகளினாலே, குறைகளை கண்டித்துணர்த்துவது அவசியமானது. ஏற்றமாறாக ஒரு விசுவாசியானவன், மற்றவர்களுடைய வாழ்விலே சம்பூரண பரிசுத்த த்தை எதிர்பார்க்க முன்பு, தன்னுடைய வாழ்க்கை தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்க்கும் போது, தேவ இரக்கத்தின் பொருளை அறிந்து கொள்ள முடியும். தேவதயவானது நீங்களை குணப்படும்படி உங்களை ஏவுகிறதென்று என்பதை உணர்ந்து அறிந்து செயற்படுங்கள்.

**ரோமர் 2:5**

**அவருடைய தயவு பொறு மை நீடியசாந்தம் இவை களின் ஐசுவரியத்தை அச ட்டைபண்ணுகிறாயோ?**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உமக்கு விரோதமான இர கமற்ற செயல்களை நடப்பிக்கும்படி நான் ஒருபோதும் எண்ணம் கொள் ளாதபடிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநட த்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உற்சாகத்தோடு நன்மை செய்யுங்கள்

இயற்கை அனர்த்மொன்றினாலே, குறிப்பிட்ட தேசமொன்றின் ஒரு பகுதியிருந்த மக்கள் வெகுவாய் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்படி, புற தேசங்களிலிருந்த நலன் விரு ம்பிகள், கட்டம் கட்டமாக சென்று, பாதிக்கப்பட்ட பகுதியுள்ள மக்களின் வாழ்க்கை வழமைக்கு திரும்ப வேண்டும் என்று சைக்ககள், தையல் இயந்திரங்கள், வள்ளங்களை கொடுத்து உதவினார்கள். அத னால், பலர் நன்மையடைந்தா ர்கள். ஆனால், குறிப்பிட்ட சில ரோ, ஒவ்வொரு குழுக்களும் புறதேசத்திலிருந்து வரும் போது, தங்களுக்கு நன்மை கள் ஏதும் நடக்கவில்லை என்று பாசாங்கு செய்து, தங்களுக்கு கிடைக்கும் சைக்கிள்கள், தையல் இயந்திரங்களை விற்று பணமாக்கிக் கொண்டிருந்தார்கள். உதவி செய்ய வந்த நலன்விரும்பிகள், அவர்களில் ஒரு சிலரை இணங் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆனாலும், ஒரு சிலரின் துஷ்பிரயோ கங்களினாலே, ஊரில் பாதிக்கப்பட்ட பலருக்கு நன்மைகள் தடைபட க்கூடாது என்று எண்ணத்துடன், சில நஷ்டங்களையும் சகித்துக் கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள். கிருபையினாலே, விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்ட அருமையான சகோதர சகோதரிகளே, அப்படியான ஈவாக கிடைத்த இரட்சிப்பின் மேன்மையை, சபையிலே இருக்கும் யாவரும் கனப்படுத்துக் கொள்கின்றார்களா? தேவனுடைய கிருபையை அசட்டை செய்யபவர்கள் ஆங்காங்கே இருக்கின்றார்கள் அல்லவா? பிரியமானவர்களே, கோணலும், மாறுபாடான உலகத்திலே வாழ்க்கின் றோம். இந்த உலகத்திலே வாழும் நாங்களும், மற்றவர்களும், இன்னும் சம்பூரணரான நிலையை அடையவில்லை. எனவே, நிலைமையகளை ஆராய்ந்தறிந்து, கூடிய அளவிற்கு விரயங்களை தவிர்த்துக் கொள்வ நல்லது. ஆனால், நீங்கள் முன்னெடுக்கும் எந்த திட்டத்திலும், யாதொரு குறைவோ, துஷ்பிரயோகமோ ஏற்படாது என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள். ஒருவன் தான் பசியாய் இருக்கின்றேன் எனக்கு உதவி செய் யுங்கள் என்று கூறினால், அவன் உண்மையுள்ளவனா என்று ஆராய்ந்து அறிவதற்கு பல நாட்களை விரயப்படுத்தி, தாமதம் செய்யாதிருங்கள். நல் மனதோடு உதவியை செய்கின்றவன் அதன் பலனை அடைவான். தீய மனதோடு உதவியை துஷ்பிரயோகம் செய்கின்றவன், தன் கிரியை களுக்கு தக்க பின்விளைவுகளை தனதாக்கிக் கொள்வான். நீங்களோ, நன்மை செய்ய நாடுங்கள்.

**கலாத்தியர் 6:9**

நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, தீமை மலிந்திருக்கும் இந்த உலகத்திலே, குறைவுகளை கண்டுபிடிக்க வாழ்நாட்களை வ விரயப்படுத் தாமல், நன்மை செய்யும் சந்தர்பபங்களை நாடித் தேடும்படிக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# காரியத்தின் கருப்பொருள்

"ஆடுகளை ஓநாய்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்: ஆகையால், சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களாயும், புறாக்களைப்போல கபடற்றவர்களாயுமிருங்கள்" (மத்தேயு *10:16*) என்று ஆண்டவராகிய இயேசு தாமே, தம்முடைய பன்னிரு சீஷர்களை திருப்பணிக்காக அனுப்பும் போது அவர்களுக்கு கூறியிருக்கின்றார். உதவித்திட்டங்களை குறித்து பேசும் போது, சிலர் எப்போதும், எல்லாவற்றிலும், யாவற்றைக் குறித்தும் ஓயாத வினாவுள்ளவர்களாக இருந்து விடுகின்றார்கள். இன்னும் சிலரோ, அன்பு சகல பாவங்களையும் மூடும் என்று கூறி, எப்போதும், எல்லாவற்றிலும், யாவற்றையும் பரிசுத்தமென்று எண்ணிக் கொள்கின்றார்கள். எப்போதும் சர்ப்பத்தை போல வினாவுள்ளவர்கள், முடிவிலே தங்கள் இருதயங்களை கடினப்படுத்தி, எல்லோரையும் தவறான முறையிலே கண்டு கொள்கின்றார்கள். எப்போதும் புறாக்களைப் போல கபடற்றவர்கள் என்று தங்களை எண்ணிக் கொள்கின்றவர்கள், ஏமாற்றத்தின்மேல் ஏமாற்றமடையும் போது, சோர்ந்து, பின்வாங்கி, மனஅழுத்தங்களுக்குள்ளாகி, தேவகாரியங்களை யும், ஊழியர்களையும், விசுவாசிகளையும் குறித்து மிகவும் கசப்புள்ளவர்களாக மாறிவிடுகின்றார்கள். பிரதானமாக இவ்விடத்திலே நாம் கவனிக்க வேண்டிய காரியமாவது, நான் மட்டும் நீதியுள்ளவன், நியாயம் எனக்கு மட்டும்தான் தெரியும், மிகுதியாக இருக்கும் யாவரும் ஓநாய்களைப் போல ஏமாற்றுகின்றவர்கள் என்று எண்ணம் ஒருவனிடம் இருந்தால், அவன் தன் இருதயத்தை தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்த்து, தேவ சமுகத்திலே தன்னை திருத்திக் கொள்ள வேண்டும்."சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும்", "புறாக்களைப் போல கபடற்றவர்களும்" என்ற இரண்டு காரியங்களையும் விசுவாசிகள் தங்களுடைய மாம்ச பெலத்தினாலேயோ அல்லது இந்த உலக ஞானத்தினாலேயோ சரியான முறையிலே நிறைவேற்றி முடிக்க முடியாது. சத்திய ஆவியானவரே தம்முக்கு கீழ்படிந்து, தமது தேவவார்த்தையின்படி நடக்க தங்களை ஒப்புக் கொடுக்கின்றவர்களை சகல சத்தியத்திலும் நடத்திச் செல்கின்றார். பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிப்பதே காரியத்தின் கடத்தொயையாக இருக்க வேண்டும். எனவே, உதவிகளை செய்கின்றவர்கள் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலோடு அதை செய்யுங்கள்.

**யோவான் 16:13**

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்**

**ஜெபம்:** பரம ஞானத்தை கொடுத்து உம்முடையவர்களை வழிநடத்தும் தேவனே, உம்முடைய வார்த்தைகளின் கருப்பொருளை அறிந்து காரியங்களை நடத்தும்படிக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாருக்கு உதவி செய்ய வேண்டும்?

ஒரு தேசத்தை அரசாண்டு வந்த ராஜாவானவன், தன் ராஜ்யத்திலே ஏழை எளியவர்களுக்கு உவி செய்யும்படி, தன்னுடைய ஸ்தானாதிபதிகளில் இருவரை அழைத்து, அவர்களுக்கு குறிப்பிட்ட ரொக்க பணத்தை கொடுத்து, நீதியான முறையிலே, மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறி, வெவ்வேறு ஊருக்கு அவர்களை அனுப்பி வைத்தார். முதலாவது ஊருக்கு சென்றவன், ராஜாவின் பணத்தை விரயப்படுத்தக்கூடாது, பாத்திரம் அறிந்து பிச்சை கொடுக்க வேண்டும் என்று கூறி, அந்த ஊரிலுள்ள மக்களுடைய நிலைமைகளை ஆராய்ந்தறியும்படி சிலரை நியமித்தான். அவன் அதிகமாக ஆராய்ந்து அறியும் போது, அவர்களின் தவறுகள் அதிகமாக வெளிப்பட்டது. அவர்களின் தவறுகளாலேயே அவர்கள் கஷ்ப்படுகின்றார்கள் எனவே அவர்களுக்கு உதவி செய்வதில் பிரயோஜனம் இல்லை என்று எண்ணி, தங்களை நாணயமுள்ளவர்கள் என்று காண்பித்த ஒரு சிலருக்கு உதவி செய்து விட்டு, பெருந்தொகையான பணத்தை திரும்ப கொண்டு வந்து ராஜாவிடம் கொடுக்கும்படி கொண்டு வந்தான். அவனுடைய மனதிலே, தான் ராஜாவிற்கு அதிக பணத்தை மிச்சம் பிடித்து விட்டேன் என்று எண்ணிக் கொண்டான். மற்றவனோ, இன்னுமொரு ஊருக்கு சென்று, உதவி தேவையோ இல்லையோ என்ற சிந்தனை ஏதும் இல்லாமல் தன் கண் கண்டவர்கள் யாவருக்கும் உதவிகளை செய்து, ராஜாவானாவன் கொடுத்த முழு பணத்தையும் செலவழித்து, தான் ராஜ கட்டளையை, தாராள மனத்துடன், முழுமையான நிறைவேற்றி முடித்தேன் என்று எண்ணிக் கொண்டான். தவறுகள் செய்கின்றவர்களுக்கு எந்தவிதமான இரக்கமும் இல்லை என்றால் இந்தப் பூமியிலே யார் தேவ இரக்கத்தை பெற்றுக் கொள்ளக் கூடும்? தவறுகளை அப்படியே பாராமுகமாகவிட்டு இரக்கத்தை காண்பித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றால், மனிதர்கள் தங்கள் தவறுகளை எப்படி உணர்ந்து கொள்வார்கள்? பிரியமானவர்களே, செய்கையையும் விரும்பத்தையும் உண்டு பண்ணுகின்ற தேவன்தாமே, அவருடைய சித்தப்படி காரியங்களை செய்வதற்கு வழிநடத்திச் செல்கின்றவராக இருக்கின்றார். எனவே, பல்வேறுபட்ட சூழ்நிலைகளிலே, தேவ சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு, சுயத்திலே தீர்மானம் எடுத்துக் கொள்ளாமல், தேவ ஞானத்தை நாடுங்கள். அதை பெற்றுக் கொள்ளும்படி தேவ வசனத்திலே நிலைத்திருங்கள்.

**கொலோசெயர் 3:16**

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக;**

**ஜெபம்:** இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிற ஞானத்தை தருகின்ற தேவனே, உம்முடைய சித்தத்தை நான் நிறைவேற்ற தேவ ஞானத்தை தந்து வழிந்த்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மைகளின் பிதாவாகிய தேவன்

வாலிப பிராயத்திலுள்ள மாணவனொருவன், தன்னுடைய பதினெட்டாவது பிறந்த தினத்தை முன்னிட்டு, தனக்கு மோட்டார் சைக்கிள் வாங்கி கொடுக்கும்படி தன் தகப்பனானவரிடம் கேட்டுக் கொண்டான். தன்னுடைய வகுப்புகளுக்கு நேரத்திற்கு செல்வதற்கும், வார இறுதி நாட்களிலே அவன் பார்த்து வரும் பகுதி நேர வேலைக்கும் அந்த மோட்டார் சைக்கிள் பெரும் உதவியாக இருக்கும் என்பது அவனுடைய கருத்தாக இருந்தது. அந்த தகப்பனானவருக்கு, பொருளாதார ரீதியாக எந்த தடைகளும் இல்லாதிருந்த போதும், தன் மகனானவனை உண்மையாக நேசித்த படியினால், அனுடைய நன்மை கருதி, அதை வாங்கி கொடுப்பதற்கு மறுப்பு தெரிவித்தார். ஏனெனில், அவனுடைய எண்ணமும், வாலிபத்தின் பரபரப்பும், ஊரின் நெடுஞ்சாலையில் இருக்கும் பயங்கரங்களும், அவன் உயிருக்கு ஆபத்தை கொண்டு வரும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தபடியால், மோட்டார் சைக்கிளை வாங்கி கொடுப்பதற்கு இது தகுந்த நேரமில்லை என்பதை நன்றாகஅறிந்திருந்தார்.மனிதர்களுடைய எண்ணப்படி,அவர்களுக்கு தேவை என்று அவர்கள் கூறிக் கொள்ளும் காரியங்கள் யாவும், ஒருவேளை அவர்களுக்கு நன்மையாக தோன்றினாலும், அவர்களுடைய வாழ்விற்கு அது தீமைகளை உண்டு பண்ணிவிடலாம். உன்னிடத்தில் கேட்கின்றவனுக்கு கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகின்றவனுக்கு முகங்கோணாதே என்று ஆண்டவராகிய இயேசு கூறும் போது, அவர் நன்மை செய்வதற்கு தயக்கம் காண்பிக்காதே என்பதையே சுட்டிக் காட்டுகின்றார். முதலாவதாக, ஒருவன் நன்மை செய்வதற்குரிய பெலன் அவனிடத்தில் இருக்க வேண்டும். அந்த உதவி அதைப் பெற்றுக் கொள்பவனுடைய வாழ்விலே தீமையை உண்டாகும் என்று திட்டமாக அறிந்திருந்தால், அந்த உதவியை செய்யாதிருப்பதே அவனுக்கு நன்மையாக இருக்கும். தம்முடைய குமாரனென்று பாராமல், அவரையே நமக்காக கொடுத்தவர், சகல நன்மைகளையும் நமக்கு அருளிச் செய்வார். ஆனாலும், நாம் ஜெபத்திலே ஏறெடுக்கும் விண்ணப்பங்கள் எல்லாம், நாம் நினைத்த நேரத்தில் பெற்றுக் கொள்வதில்லை. தேவனாகிய கர்த்தர், நம்முடைய தேவை இன்னதென்றும், அதை நாம் பெற்றுக் கொள்ளும் சரியான நேரத்தையும் அறிந்திருக்கின்றார். எனவே, நாம் நன்மை செய்ய ஒருபோதும் தயங்கக்கூடாது. நம்முடைய கிரியைகள் மற்றவர்களுக்கு தீமையாக மாறாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

**ரோமர் 8:28**

**...சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, உம்முடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் உம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நீர் செய்து முடிப்பமால் உமக்கு ஸ்தோத்திரம். இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மைகளை பின்போடாதே

கடந்த நாளிலே நாம் தியானித்தபடி, ஒருவன் தனக்கு நன்மையுண்டாகும் என்று தன் இருதயத்திலே நிச்சயித்தவனாக, உன்னிடம் உதவியை கேட்கும் போது, அந்த உதவியினால், அவனுக்கு பொல்லாப்பு அல்லது தீமை உண்டாகும் என்று நீ நிச்சயமாக அறிந்திருந்தால், அதைக் குறித்து உண்மையுள்ள இருதயத்தோடு நீ அதை அவனுக்கு எடுத்துக் கூற முடியும். ஆனால், எந்த அளவினால் நீ மற்றவனை அளக்கின்றாய் என்பதைக் குறித்து தேவன் முன்னிலையிலே எச்சரிக்கையாய் இருப்பது உனக்கு நல்லது. உனக்கு பின்வரும் உன்னுடைய சந்ததியின் நிலையை இன்னது என்று உனக்கு தெரியாது. எந்த ஒரு விசுவாசியும் தன்மை ஞானி என்றும், தான் ஒருவனே நாணயமுள்ளவனென்றும், தனக்கே எல்லாம் தெரியும் என்று எண்ணிவிடக் கூடாது. அந்த எண்ணக் கருவானது, அதை கொண்டுள்ளவனுடைய இருதயத்தை கடினப்படு த்தி, நாளடைவிலே இரக்கமற்றதாக மாற்றிவிடும். நாம் தேவன் முன்னிலையில் மனத்தாழ்மையோடு உண்மையுள்ளவர்களாக நடந்து கொண்டால், அவர்தாமே நாம் செய்ய வேண்டியவைகளைா நமக்கு போதித்து நடத்திச் செல்வார். அவருடைய போதனைகளை தமது வார்த்தை வழியாக நமக்கு வெளிப்படுத்தியிருக்கின்றார். "நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.உன்னிடத்தில்பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி: நீ போய்த் திரும்பவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே. அச்சமின்றி உன்னிடத்தில் வாசம்பண்ணுகிற உன் அயலானுக்கு விரோதமாக தீங்கு நினையாதே." (நீதிமொழிகள் 3:27-29). கருப்பொருளாவது, நீ மற்றவனுக்கு இரக்கம் காண்பிக்கும்படி உன்னிடத்தில் நிர்வாகம் இருக்கையில், நீ இரக்கமற்றவனாக மாறிவிடாதே. நன்மை செய்ய தயக்கம் காட்டி, கால தாமதம் செய்யாதே. "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." (2 கொரி 9:7). பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனாகிய கர்த்தர் தாமே நம்முடைய சிந்தை இன்னது என்று அறிந்திருக்கின்றார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. எனவே, அவர் முன்னிலையில் நாம் உண்மையுள்ளவர்களாக இருந்து, அவரையே அசையாத நம்பிக்கையாக கொண்டிருந்தால், அவர் நம்மை தீமைக்கு விளக்கிக் காப்பார்.

**சங்கீதம் 139:2**

என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.

**ஜெபம்**:இரக்கங்களின் பிதாவாகிய தேவனே, நன்தை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இருக்காதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# திட்டமிட்டு வாழும் வாழ்க்கை

ஒரு விசுவாசியானவன், இன்னும் பத்து வருடங்களுக்கு பின் நடக்க சாத்தியமான தன்னுடைய மகளுடைய திருமணத்திற்காக பெருந் தொகையான பணத்தை சேகரித்து வைத்தான். திட்டமிட்டு வாழ வேண் டும். ஞானமாக நடந்து கொள்ள வேண்டும். தான் இருந்தாலும் இல்லா விட்டாலும், தன்னுடைய மனையியோ பிள்ளைகளோ அப்பத்துண்டுக்கு இரங்கித் திரியக்கூடாது என்பது அவனுடைய ஆதங்கமாக இருந்தது. வேறொருவன், கர்த்தர் வரத் தாமதமானால், இன்னும் பத்து வருடங்களில், இடம்பெறக்கூடிய தன்னுடைய மகளானவளின் உயர் கல்விக்காக சேர்த்து வைத்த பணத்தின் பெரும் பகுதியை எடுத்து, இன்றைய நாட்களிலே ஏற்பட்டிருக்கும் பொருளாதர நெருக்கடியினால்: உணவு, உடை, உறையுள், அடிப்படைக் ஆரம்பக் கல்வி போன்றவற்றிக்காக தவிக்கும் சில பிள்ளைகளுக்கு உதவி செய்யத் தீர்மானித்தான். எதிர்காலம் கர்த்தருடைய கரத்தில் உண்டு. நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளை பார்த்துக் கொள்வார் என்பது அவனுடைய விசுவாசமாக இருந்தது. கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதர சகோதரிகளே, ஞானமாய் நடந்து கொள்வதும், திட்டமிட்டு வாழ்வதும், விசுவாசத்திலே உறுதியாயிருப்பதும் அவனவனுடைய தனிப்பட்ட தீர்மானமாக இருக்கின்றது. ஒரு வேளை நீங்கள் திட்டமிட்டு வாழ்க்கின்ற விசுவாசயாக இருந்தால், எத்தனை ஆண்டுகளுக்கு முன் நீங்கள் திட்டமிட்டு வாழப்போகின்றீர்கள் என்பதை குறித்து சிந்தித்துப் பாருங்கள். உங்கள் சொந்த குடும்பத்தின் சேம நலனுக்காக பல தசாப்பதங்களுக்குரிய தேவைகளை சந்திக்கும் அளவிற்கு சேர்த்து வைத்துவிட்டு, என் ஆத்துமாக களிகூரு என்று கூறிக் கொள்ள கூடுமோ? “நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே.” (யாக்கோபு 4:14). ஒருவன் தன்னுடைய வாழ்க்கை நிறைவான பின்பு, மற்றவர்களுக்கு உதவி செய்வேன் என்று சொல்லிக் கொள்ளலாம் அல்லது தன்னிடம் தற்போதுள்ளதில் ஒரு பகுதியை பகிர்ந்து கொடுக்கலாம். இது விவாதத்திற்குரியதல்ல, இது அவனவனுடைய தீர்மானம். அவனவன் தன் தன் வாழ்வில் வைத்திருக்கும் அளவுகோல். எனவே, இவைகளைக் குறித்து தியானம் செய்து, மேலான அழியாத பொக்கிஷங்களை உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் சேர்த்து வையுங்கள்.

**மத்தேயு 7:20**

பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்;

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, என்னுடைய வாழ்வு எப்போதும் உம்மிலே நிலையாக இருக்கும்படிக்கு, நீர் எனக்கு உணர்வுள்ள இருதயத்தையும், பிரகாசமுள்ள மனக்கண்களையும் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "தர்மசகாயமாகிய பணிவிடை"

"பரிசுத்தவான்களுக்குச் செய்யவேண்டிய தர்மசகாயத்தைக்குறித்து, நான் அதிகமாக உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. உங்கள் மனவிருப்பத்தை அறிந்திருக்கிறேன் அகாயாவிலுள்ளவர்கள் ஒருவருடமாக ஆயத்த மாயிருக்கிறார்களென்று நான் மக்கெதோனியருடனே சொல்லி, உங்களைப் புகழந்தேனே. உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பி விட்டதுமுண்டு. அப்படியிருந்தும், உங்களைக்குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி இந்தக்காரியத்தில் வீணாய்ப்போகாமல், நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப்பட்டவர்களாயிருப்பதற்கு, இந்தச் சகோதரரை அனுப்பினேன். மக்கெதோனியர் என்னுடனேகூட வந்து, உங்களை ஆயத்தப்படாதவர்களாகக் கண்டால், இவ்வளவு நிச்சயமாய் உங்களைப் புகழ்ந்ததற்காக, நீங்கள் வெட்கப்படுவீர்களென்று நாங்கள் சொல்லாமல், நாங்களே வெட்கப்படவேண்டியதாயிருக்கும். ஆகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தானதர்மமானது லோபத் தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத் துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்து கிறதற்குச் சகோதரரை ஏவி, உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது. பின்னும் நான் சொல்லுகிறதெ ன்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிரு க்கிறார். வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும். விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார். தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்."

**2 கொரிந்தியர் 9:12**

**இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரணபலனுள்ளதாயும் இருக்கும்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, நீர் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். நான் வழிவிலகி என் பிரயாசங்களிலும், திட்டங்களிலும் நம்பிக்கை வைக்காதிருக்க என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.